இராவணன் ஓர் ஆத்தமிழன்

பித்தன்

ஆராய்ச்சி நிலையம்

இராவணன்
ஓர்
அறத் தமிழன்

கோட்டாகுடி பெரியநாயக்கர்
வெ. கோவிந்தசாமி அவர்களின்
நூல் தொகுப்பு

★

ஆசிரியர் :
பித்தன்

★

விற்பனை உரிமை :
பொது அறிவுப் பண்ணை,
சென்னை-5.

வெளியீடு : 6.
முதற்பதிப்பு : நவம்பர், '51.

விலை 4 அணா

செல்வம் அச்சகம், சென்னை 2.

அணிந்துரை.

பனி நிறைந்த பாறைகள்; முத்து குளிக்கும் கடல்கள்; நெல் விளையும் வயல்கள்; சந்தனம் அகில் தேக்கு முதலியன நிறைந்த காடுகள்; ரோஜா, சண்பகம், மல்லி, முல்லை இவைகள் கவினுற காட்சிதரும் சோலை; தாமரை பூத்த தடாகம்; வற்றாத ஜீவநதி; தங்கம் தரும் நிலம்—இத்தகைய இயற்கை செல்வங்களைப் பெற்று இயல், இசை, நாடகம் என்னும் மூவகைத் தமிழோடு விண்தோயும் மணி மாடங்களில் செல்வச் சிறப்புடன் வாழ்ந்த நானிலம் போற்றும் நாகரிக வாழ்வை இராவணன் அரசாண்ட காலத்தில் தமிழர்கள் வாழ்ந்தனர். அந்தத் தலை சிறந்த நாகரிகத்தை நினைவுறுத்தி தமிழகத்தின்மீது பூட்டப்பட்டுள்ள தளைகளை அறுத்தெறிவதற்கான அறப்போர் துவக்குவதற்கு இந்நூல் வீழ்ச்சியுற்ற தமிழர்களுக்கோர் பாசறையாக விளங்கும் என்று கருதி எழுதலானேம்.

இப்படிக்கு,

பித்தன்.

பதிப்புரை.

தமிழருக்கு தந்த தனிநிகர் மன்னன் இராவணன் இலங்கையின் அதிபதி. அவன் உலகம் கண்டறியாத அளவுக்கு முறையோடு அரசு கண்டு மக்களை இன்பத்தில் திளைக்கும் அளவுக்கு வளனுற ஆண்டான். பல் கலைக் கழகம்; அரசியல் மன்றம் இவைகளை நிறுவி தம் குடி மக்களை அறிஞர்களாக்கினன்—இந்த ஒளி நிறைந்த இராவணன் அரசாண்ட காலத்தை தமிழர் இருண்ட காலம் என்று பறைசாற்றும் ஆரியர் கூற்றை பஞ்சு பஞ்சாக்கும் முறையில் நல்ல தமிழ் ஆராய்ச்சி கொண்டு தீந்தமிழில் "இராவணன் ஓர் அறத் தமிழன்" என்னும் நூலை எழுதித் தந்த பித்தன் அவர்களுக்கு நமது உளம்கனிந்த நன்றி. அவர்தம் தமிழ்ப்பற்று சிறந்திடுக!

இராவணன் ஓர் அறத் தமிழன்

இன்றைய உலகத்தில் பல மொழிகள் வழங்குகின்றன. அவைகளுள் எம்மொழி செம்மை வாய்ந்ததென்ற விவாதம் நாடெங்கணும் நடைபெறுகிறது. ஐரோப்பிய நாட்டில் வதியும் மாந்தரையோ அல்லது ஆங்குப் பொலிவுறும் இலக்கியத்தில் திளைக்கும் சிந்தனையாள ரையோ எம்மொழி எல்லா வகை நலன்களைக் கொண்டு மிளிர்கிறதென்றால் அவ்வினாவுக்கு அவர்கள் அரசியல் நுணுக்கத்திற்குப் பிரஞ்சு மொழியெனவும் இலக்கியச் சுவைக்கு யவன மொழியெனவும் விடை பகர்வர்.

பதினாறாம் நூற்றாண்டில் இங்கிலாந்து மறுமலர்ச்சி யடைந்த பிறகு நாட்டின் வளத்தில் ஊக்கங் கொண்ட வர்களும் மொழி வளர்ச்சியில் விழைவு எய்தினவர் களும் எதிர்காலத்தில் எல்லோரும் இன்பத்தில் திளைக்க பூங்காவனத்து சொட்டும் தேறலை உண்டு களிக்க ரீங்காரம் செய்யும் வண்டுபோல வளமான வாழ்வு எய்த திட்டங்கள் பல இயற்றினவர்களும் ஒருங்கே கூடி உலகில் விளங்கும் எல்லா மொழிகளின் சிறப்பு களையும் அம்மொழிகளின் ஏற்றங்களையும் தங்கள் தாய் மொழியான ஆங்கிலத்தில் மிளிரச்செய்ய ஊக்கங் கொண்டனர். முயன்று பார்த்தனர். ஆக்க வேலை அநேகம் செய்தனர். கருத்து வேற்றுமை அரசியல் வேற்றுமை இன்னும் பிற வேற்றுமை தங்களுக்குள் இருந்தாலும் அவைகளை ஒருபுறம் ஒதுக்கி அறிஞர் அணிவகுத்து இலக்கியம், இலக்கணம், அரசியல், விஞ் ஞானம் இவைகளத்தனையும் ஆங்கில மொழியில்

விளங்குறச் செய்ய பன்மொழியில் பெயர்த்து ஆங்கிலத்தை ஐரோப்பிய தேயத்திலே அழகுறச் செய்தனர்; அரியாசனத்தில் அழகுறச் செய்தனர்; பாராளுமன்றத்தில் பரிணமிக்கச் செய்தனர். இன்று ஆங்கிலம் அகில உலகத்தில் அறிவு செறிந்ததாகவும் அழகிய மொழியாகவும் உலக கலைக்கு உறைவிடமாகவும் திகழ்கின்றது. "உலக மாந்தர்களே! அறிவு பெற எம்மின் வருவீர். கலை பல பயில்வீர். எட்டுத்திக்கும் சென்று எமது எழிலைப் பரப்புவீர்" என்ற செய்தியை ஆங்கிலம் உலகுக்கு விடுக்கின்றது. இது உண்மை. வெறும் புகழ்ச்சியில்லை. ஆயின் மூவேந்தர் முறையோடு போற்றி ஆதரித்த பைந்தமிழ் அப்படியன்று. தேனினும் தீஞ்சுவையுடைய தென்சொல் மிகவும் தொன்மை வாய்ந்தது; வரலாற்றுக்கு முந்தியது. உலகத்து முதன்மக்கள் தோற்றக் காலத்தே தோன்றியது பைந்தமிழ். இதற்குப் பிறப்பிடம் எம்மொழியும் இல்லை. இஃது தானே தனித்து இயங்குகின்றது; என்றுமே தனித்து இயங்கும் ஆற்றலுடையது.

பன்னெடுங் காலத்துக்கு முன்பு உலகம் புரக்க வந்த செந்தமிழனை அரியாசனத்தில் அமர்ந்து செங்கோலாச்சி பாராண்ட பெருமை நவிலும் சங்க மருவிய நூல்கள் முதற்கொண்டு இன்று உறங்கிக் கிடக்கும் தமிழனைத் தட்டியெழுப்ப செறுமுகம் நோக்கிச் செல்லென ஏவலிடும் இராவண காவியம்வரை பற்பல சுவைகளோடு திகழ்கின்றன அவை இப்போது மக்கள் இதய துடிப்புக்கு ஏற்றதும் உணர்ச்சியை ஊட்டி நாட்டின் மீது பூட்டப்பட்டுள்ள தளைகளை அறுத்தெறிதற்கான அறப்போர் புரியும் ஆற்றலைத் தரத்தக்கது மாகவும் இருக்கின்றன.

இனித்த பாலினுந் தேனினு மின்சுவைக்
கனித்தொ கையினுங் கட்டிக் கரும்பினும்

நினைத்த வாயுஞ்சொல் நெஞ்ச மினித்திடும்
தனித்த மிழ்ப்பெருந் தாயினை

எந்தெந்த முறையில் நாட்டு மக்களுக்கு தமிழ்ப் பெரும் புலவர்களால் எடுத்துக் காட்டப்படுகின்றதென் பதை அறிய முயலுதல் தமிழர் தம் தலையாய கடமை யாகும்.

உலகை உன்னும்போது மக்கள் எதிர்காலத்தில் எழிலோடு வாழ வழிவகுக்கும் கலைபல பெற்று கருத்து நிறைவுடைய மொழியாக பல விளங்குவதற்குத் தாய் மையாக இலங்கும் கன்னித் தமிழைப் போற்ற வேண் டும் விண்ணகத்தே பொலியும் உடுக்குழாங்கள் போல மண்ணகத்தே மொழிபல விளங்கி காலத்தால் அழிந் தொழியினும் ஆயிரமாயிரம் ஆண்டுகளான பின்னரும் ஆரியம்போல் உலக வழக்கு அழியாது என்றும் சீரிள மைப் பெற்று செங்தேன் துளிக்கும் செந்தமிழ்த் தாயினைப் போற்றவேண்டும். கன்னடம், களிதெலுங்கு, கவின்மலையாளம், துளுவம் ஆகிய மொழிகள் நற் றமிழன்னையின் உதரத்துதித்தெழுந்து ஒன்றுபல ஆயிடினும் அத்தனை மொழிகளையும் இன்றும் அரவணைத்து அன்பு கூறும் அருந்தமிழன்னையைப் போற்றவேண்டும். எழுத்து, சொல், பொருள், யாப்பு அணி—இவ்வைந்தினும் கவினுற விளங்கி மன்னர் மூவரால் முறையோடு முன்புதம் ஆவியென்ன அருமை யோடு போற்றப்பட்டு அரசுவிழை செல்வமும் பெற வேண்டிய பேறுகளும் விருதுகளும் வாய்ந்த மன்னை நேரெழு வள்ளலும் மற்றரும் பொன்னைக் கொடுத்தும் இன்னுயிர்தன்னை பெருமையோடு ஈந்தும் முத்தாய சங்கத்தில் வளர்க்கப்பட்டு அது இனித்த சுவையோடு நினைத்த வாயுஞ் சொல் நெஞ்சும் இனித்திடும் தமிழ்ப் பெருந்தாயினைப் போற்றவேண்டும்.

பண்டைக் காலத்து தமிழர் வழிவழி வந்த பெரு மக்கள் மனத்துள் மாசிலாது "எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் நிரை" என்றமொழிக்கிணங்க இதயம் நிரம்பிய அன்பினராக விளங்கி பலவளங் கண்டு சுற்றங் கலந்து கிடைத்தற்கரிய பொருளேயாயினும் அதை, இவர் இன்னர் என்ற வேறுபாடில்லாது "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற முறையில் யாவரும் பகிர்ந் துண்டு உலகம் வாழ தமிழர் வாழ்ந்தனர். ஒழுக்கம் உயிரினும்பெரிது என்பதை அறிந்த தமிழர் அதை வாழ்க்கையின் தத்துவமாகக்கொண்டு நிலையினின்று பிரிந்து காணல் இழுக்கம்போல் இழிவில்லை என்ப துணர்ந்து, சீலத்தோடு வாழ்ந்து சிறப்பு எய்தினர். இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழை மூவேந்தர் ஆதரித்து நாடெங்கணும் திருவுங் கல்வியுஞ் செய் தொழின் மேன்மையும் பரவும்வகை செய்து மாண்பு அடைந்தனர்.

தமக்கென ஒரு நாடில்லாது அங்குமிங்கும் அலைந்து அல்லலுற்ற அநாதிகளை—இவண் வருக! இவண் வருக வென்று அழைப்பதுபோல இயற்கை வளனும் செயற் கை நலனும் ஒருங்கே அமையப்பெற்று அதனல் கவர்ச்சியும் இன்ப உணர்ச்சியும் பெற்ற நாடோடி களான ஆரியர்கள், விந்தியமலைக்கு வடக்கே தங்கள் இருப்பிடமாகக் கொண்டு வாழ்க்கை நடத்த தொடங் கினர். அன்று அவர்கள் நல்லவர்கள் போல வாழ்ந்து நயவஞ்சகமாக, நல்லறத்தோடு விளங்கிய தண்தமிழ் மக்களை வஞ்சித்தனர். தமிழர்களை நேர்முகம் நின்று போர்முகத்தில் அல்ல; வாளோடு வாள் வீசி வலிமை காட்டி வீரங்காட்டினுர்களல்ல; மலைகுலைய மறவர் மனம் தடுமாற மறப்போர் துவக்கி வாகைசூடி வான் புகழ் எய்தினுர்களல்ல—வேறு என்ன?

மத மூட நம்பிக்கை, வர்ணாஸ்ரமம், பிறப்பில் உயர்வு தாழ்வு, நிறத்துக்கு நிறவேற்றுமை கற்பித்தல் —இன்னும்பிற கள்ளத்தனத்தால் தமிழர்களை ஏய்த்தனர்; குலக்கொடியை வேரறுத்தனர்.

வட இந்தியாவில் தங்கி வாழ்வுக்கு வழி வகுத்துக் கொண்ட ஆரியர்களுக்குத் தலைவன் வில்வீரன் இராமனுக்கும் தென்னாட்டு முடியுடை மூவேந்தர் வழிவழி வந்தவரும் சீலத்தால் உயர்ந்து தன்னரும் புகழை இன்பத் தமிழர் வாழ்வு அதனுக்கு ஈந்து தண்டமிழகத்தை காக்கத் தனிக்களத்து ஒருவனாகி புகழ செங்கோலோச்சிய சீர்மலி இராவணனுக்கும் நடந்த போரே இராமாயணம்—இது யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டதாகும். மேலும் சரித்திரம் வழி நின்றோர்க்குப் புலனாகக் கூடியதாகும்.

மூன்று கடல் ஒருசேரக் காணப்படும் குமரிமுனை ஒரு காலத்து ஒருபெரும் நிலப்பரப்பாக இருந்தது. இந்துமாக்கடல் என்னும் நீர்பரப்பு அக்காலத்து இல்லை. அதை குமரிக்கண்டம் என்றே அழைத்தனர். இன்று விளங்கும் குமரி முனைக்கு அப்பால் ஓர் ஆயிரம் சதுர மைல் கொண்டதோர் வளமைசான்ற நிலத்தில் மஞ்சு தவழ் குமரிமலை பன்மலை முதலியனவும் விஞ்சு புகழ் குமரியாறு பஃறுளியாறு மற்றும் நிலத்திற்கோர் அணியென்றே விளங்கின. செங்கரும்புஞ் செந்நெல்லுஞ் செருக்கோடு வளர்ந்து மார்த்தாண்டவனை மூடிடும் வளமையோடு அப்பெரு நிலம் அழகோடு திகழ்ந்து விளங்க குமரிமலையின் குமரியாறும், பன்மலையின் பஃறுளியாறுமே காரணமாகும்.

நாடுபுகழ் தமிழ் நாட்டினது தென்கோட்டினில் அணியுற விளங்கிய குமரியாறுக்கும் முத்தமிழ் முது

நெறிப்போலப்பத்தியருது செல்லும் பஃறுளியாறுக்கும் இடையே இருந்த நிலத்தை பெருவள நாடு எனவும், பஃறுளிக்கும் தென்கடலுக்குமிடைப்பட்ட நிலத்தை தென்பாலி நாடெனவும் அழைத்தனர். இவ்விரு நாட்டுக்கும் தலைநகரமாயிருந்த மதுரை பஃறுளி யாற்றங்கரையில் இருந்தது. குமரிக்கும் விந்திய மலைக்குமிடைப்பட்ட பரப்பை திராவிடமெனவும்

அதற்கு வஞ்சி தலைநகராக இருந்தது கிழக்கே வங்கக் கடலும் சாவகம் முதலிய நிலம்வரை பரவிய நிலப்பரப்பாகவும் அதற்கு நாகை தலைநகராக விளங் கியது. இந்தத் தமிழகப் பிரிவுகள் தண்தமிழ் மேலவர் செப்பிய முறையினில் சீர்சிறக்க திகழ்ந்தன.

முத்தமிழை மூவேந்தர் முறையோடு ஆதரித்து அதைத் தமிழ்ப் புலவர் தம் இன்னுயிரினும் அழகுற வளமைபடுத்தி அதனல் அக்காலத்து தமிழ் மக்கள் எண்ணம் வளர்ந்து நாகரீகம் சிறந்தது. எல்லோரும் மகிழ்ந்து குலாவி வாழ்ந்த குமரிக்கண்டம் சான்ருேர் வழி சிறந்தது அவண் வாழ்ந்த தமிழர்கள் பிறப்பில் உயர்வு தாழ்வு கண்டார்களில்லை; கற்பனையிலும் ஆண் பெண் என்றும் சாதி இரண்டொழிய வேறு உணர்ந்தார் களில்லை சாதி சமயங்களிலும் சாத்திரக்குப்பை யிலும் மனஞ்செலுத்தி மருட்சி யடைந்தார்களில்லை. உலகம் சிறக்க என்றென்றும் வாழ நல்ல வழிகளைத் தீந்தமிழில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வகுத்து அதனல் வான்புகழ் கொண்ட செந்தமிழ்ப் புலவர் வள்ளுவனர் திட்டவட்டமாக காட்டிய

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமையால்"

என்னும் திருமொழிக்கொப்ப அக்காலத்தவர் வாழ்ந்தனர். நெல்லும் நீரும் மாந்தருக்கு நிகரில்லாத தென் பதுணர்ந்து பழுதிலாத பயிர்த்தொழிலைப் பழந்தமிழ் வகுப்பாரெல்லாம் உழுந்தொழிற் மேற்கொண்டனர். பால்நுரைப் போலப் பஞ்சிற் பட்டில் நல்ல மயிரில் பொன்னின் நூல் நிரைத்து உள்ளங்கொள்ள நுணுகிய சாயமேற்றி நெய்யப்பட்ட நேரிழை ஆடை செய்து அவனிக்குத் தந்து அதனால் வான்புகழடைந்தனர். இவைமாத்திரமன்றி நாடு கண்டு நன்குண்டு வாழ, காட்டை வெட்டி, கட்டிடங்கட்டி, பாங்குறு தொழிலை மேற்கொண்டு அதற்கு ஏற்ற பயனை எய்தி ஓங்கிய செல்வத்தராய் ஒரு குறையின்றி பொலிந்தனர். நாளடைவில் தொழிலுக்கு ஏற்ப இனப் பிரிவினராய் வாழ, அத்தகைய தொழிலில் ஈடுபட்டுள்ள மக்கட் குழுவினருக்கே கொள்முதல் எடுத்து ஒவ்வொரு தொழில் செய்வோரும் ஒவ்வொரு வகுப்பானர்கள்.

மக்களைத் தழுவி மன்றம் செலுத்தும் வழக்கம் இன்றைய சகாப்தத்திலும் காண்பது மிகவும் அரிதாகின்றது. இருப்பினும் கடந்த ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஐரோப்பிய தேயத்தில் அரசு என்பது கேள்விப்படாத காலத்தே தேன்ஒத்த செந்தமிழர் அரசியல் மன்றத்தில் நின்று மாந்தர் வாழ்வு என்றும் இனிக்கத்தக்க முறையில் குடிதழுவி கோலோச்சிய வரலாறு உலகில் முதன் முதலில் கடல்கொண்ட— தென்னாட்டில் சீர்சிறக்கப் பொலிந்தது. அந்தப் பெரிய

நிலப்பரப்பை அங்குள்ள இயற்கைக்கொப்ப ஐந்து வகை நிலமாகப் பிரித்தனர். அந்த ஐவகை நிலமக்களும் தலைவர்களைத் தங்களுக்குள் வைத்துக்கொண்டு அவர் தம் செயலுக்குட்பட்டு வாழ்ந்தனர். அதன்பின் இவ்வளவு பெரிய நிலத்தை ஆட்சி புரிவதற்கேற்ற பராக்

கரமும் அறிவின் திறனும் ஒழுக்கத்தின் சீலமும் மற்றெல்லாம் வாய்க்கப்பெற்ற வீரனை மாபெருந் தலைவனாக ஏற்படுத்தினர். அம்மாபெருந்தலைவன் இலங்கைக்குத் தெற்கே இருக்கைக் கொண்டு தம் புதல்வர்களுள் ஒருவனைத் தென்னாட்டுக்கும் மற்றொருவனைக் கிழக்கு நாட்டுக்கும் இன்னொருவனைத் திராவிட நாட்டுக்கும் தலைவனாக்கினான். அம்மூவரும் தந்தை தாயினும் பரிவு மாரிபோல் பொருள் ஈந்தும் உயிரனைய தாய்மொழி வளர்த்தும் பல நூல் துறை பழுத்த நற் பழந்தமிழ்ப் புலவர் சொன்ன சொற்படி புரத்து இசைத்து தொண்டாற்றினர்.

அக்காலத்து வாழ்ந்த அறிவு செறிந்த தமிழ்ப் பெருமக்கள் சீலத்தோடு பொலிவுற்றனர். அஞ்ச வேண்டிய செயல்களுக்கு பொறிபுலனடக்கி பொது வாழ்வுக்கு இறந்தேனும் இயன்றன செய்குவதல்லாமல் மறந்தேனும் பிற மக்களுக்கு கேடு சூழாத மணித் தமிழர்களாக மாண்புற விளங்கினர். அவர்கள் அறிவால் ஆண்டவனை வணங்கினர். இன்றுபோல அறுவறுக்கத்தக்கமுறையிலே நட்ட கல்லுக்கு நாலு பூவைச் சாற்றி அறியாத மொழியை அறிந்தது போல் முணுமுணுத்து உலகம் நையாண்டி செய்யும் அளவுக்கு, வேண்டிய பறவைகளையும் விலங்குகளையும் ஏழிசை பயனாய் எழிலுடன் திகழும் இறைவனது பெயரைச் சொல்லி அந்தக் கல்லுக்கு வெட்டித் தள்ளும் அகோர வழிபாடு அன்றிருந்ததில்லை. உயர்ந்த முறையில் இறைவணக்கம் செய்தனர். கண்ட கண்ட கோலங்களால் வானுலகத்துக்கும் வானுலகத்துக்கப்பால் தெய்வபோகம் ஒன்று இருப்பதாக எண்ணி அதைக் காண விரும்பினவர்கள் அன்றிருந்ததில்லை.

அன்பாகி யருளாகியறிவாகி யுலகுயிரின்
முன்பாகி யொளியாகி முதலாகி முடியாத
இன்பாகி யியல்கின்ற இறைவாழ்த்தி முறை
வாழ்ந்தார்.

அவர்கள் அறத்தைத் தொண்டாகக் கொண்டு அழகுற ஒழுகி வந்தனர். தன்போலப் பிறவாழ்வதனைப் பேணும் பண்புடையவர்களாக பரிணமித்தனர். பிறருக்குத் தீங்கிழைக்கவோ அல்லது கள்ளத்தனமாக பொருளைக் கவரவோ செயலாலும் சிந்தையினாலும் எண்ணுதவர்களாய் பகுத்துண்டு பல்லுயிரோம்பும் மனத்தினராக வாழ்க்கையில் காட்டி இடர்காணுப்படி வாழ்ந்தார்கள். அவர்கள் சான்றோர் வழி நின்று நற்குண நற்செய்கைதமை இலக்கியமாய்க் கொண்டு எழிலோடு விளங்கினர். அவர்கள் திடமான எண்ணத்துடையவர்களாக இருந்தனர். மலையென குவிந்த செல்வம் ஒழிவதாயினும் சரி; அடைவதற்கரிய பெருமை அழிவதாயினும் சரி; உலகம் உவக்கும் விருதுகளும் பேறுகளும் மறைவதாயினும் சரி நெறி பிறழ வாழ மனம் ஒருப்பட்டார். அறப்போர் செய்குவதன்றி அரசிழக்க நேரினுமே மறப்போர் செய்வதறியாது மனஞ்செறிந்த மனத்தினராக விளங்கினர். ஆகவே அன்று வாழ்ந்த பெருமக்கள் இதயம் நிரம்பின அன்பினராக காணப்பட்டனர்.

தாய்மொழிப் படலம்

வரலாறு இல்லாத நாடுகளுக்கெல்லாம் இன்று வரன்முறையான குறிப்புகள் எழுதப்பட்டுள்ளன. ஐரோப்பிய தேயத்திலுள்ள சரித்திர ஆராய்ச்சியாளர்கள் உலகத்தைப் பற்றிய வரலாறு எழுதவந்தவர்களுக்கு இந்துஸ்தானத்தைப் பற்றியும் வடமொழியான

சமஸ்கிருதத்தைப் பற்றியும்தான் அறிமுகப்படுத்தப் பட்டன. அந்த அளவில் தென்தமிழ் நாடு வேண்டு மென்றே மறைக்கப்பட்டது. இருந்தாலும் **பாதர் ஈராஸ், வால்டர் ஸ்காட்** போன்ற அறிஞர்கள் வேண்டு மென்று மறைக்கப்பட்ட தமிழகத்தையும் இராவணன் ஆண்டு வந்த இடத்தைப் பற்றியும் நல்ல விளக்கங் களைத் தந்துள்ளனர். இருப்பினும் இவர்களுக்குப் பின்னே இந்திய நாட்டில் பிறந்த ஆசிரியர்களும் இந்தியாவைப்பற்றி எழுதினர்களே தவிர தென்னாட்டு அமைப்பைபற்றியும் அங்கு வாழ்ந்த மக்களின் நாகரிகத் தைப் பற்றியும் நாகரிகத்தின் மேம்பாட்டைக் குறித் தும் அவர்கள் பேசிவந்த மொழியின் மேன்மையும் இன்னும் பிறவற்றையும் சரித்திர நூல்களில் எழுத வில்லை. அந்த அளவுக்கு மறைக்கப்பட்ட கடல் கொண்ட தென்னாட்டை வால்மிகி—இராமயாணத்தில் மந்தியும் மற்றேனைய விலங்குகளும் மனிதத் தன்மை யற்ற அரக்கர்களுமே வாழ்ந்து வந்தனரென்று எழுதப் பட்டுள்ளது. இது முற்றிலும் தவறு.

இந்தக் குமரிக் கண்டத்தில்தான் மக்கள் தோற்றம் முதன்மையில் உண்டானது. உயர்ந்த நாகரீகம் சிறக் கப் பொலிந்தது. எல்லாவகை நலன்களும் சிறந்து விளங்கின.

பரிதியி லிருந்து சிதறிய வுலகப்
பகுதியில் முதலினில் குளிர்ந்து

பெரிதுயிர் வகைகள் முதன்முதல் தோன்றப்
பெற்றது பழந்தமிழகமே

வருதமி ழகத்து மக்களே யுலக
மக்களுக் கொருமுதல்.

என்ற பாடல் மூலம் ஆசிரியர் நமக்கு நல்ல விளக்கம் தருகின்றார். இதை எவராலும் மறுக்க முடியாது. இதுவே உலக அறிஞர்களின் கருத்தும் ஆகும். அங்கே தான் முதன் முதல் தமிழ்த் தோன்றியது. ஆகவே உலக மொழிகளுக்கு முதன்மையானதும் மற்றேனைய மொழிகளுக்குத் தாய்மை மொழியுமாகும்.

அந்த நாட்டிலே பன்னருங் கலைதெரி தமிழ்ப்பட்டி மண்டபங்களை நிறுவி ஆங்கு ஒண்டமிழ்ப் புலவர்களை ஒருங்கு கூட்டி. வண்டமிழ் நூல்களை வரையறுக்கச் செய்தனர். அவை பொன்னெனப் பொலிந்து பூவென மலர்ந்து புலவர்செங்நாவிடை வளர்ந்த தன்னிகரில்லாத்" தமிழ் நுல்களாக சிறந்தன. அந்நூல்கள் புலவர் பெருமக்களேயன்றி மற்று எல்லோராலும் போற்றப்பட்டன."

"வில்லே ருழும்போர் வீரர்களும் வெவ்வேறான
வினைவலரும்
நெல்லே ருழும்வே ளாளர்களும் நிலங்காப்
புடைய மன்னர்களும்
மல்லே ருழும்பொன் வாணிகரும்"

என்று ஆசிரியர் வரையறுத்துச் செப்புவதுபோல பல்வகை வினை மேற் கொண்டவர்களும் தாய்மொழி யானத் தமிழ் வளர்ச்சியில் மனம்செலுத்த மறந்தார் களில்லை.

கம்பன் கருதுவதுபோல இலங்கை மாநகர் கல்லா மக்களும் இரக்கமற்ற அரக்கர்களும் சூழ்ந்த இடமன்று. அங்குள்ள மாடங்கள் கூடங்களில் தமிழ் நூல்கள் ஏராளம். அவண் விண்ணுற விளங்கிய மன்றங்களில் புலவர் கூட்டங்கள். இவ்வாறு அங்கு தமிழ் எனதுரிமை

எனச் சொல்வதுபோல தனித்தனி வகையிலே செந்தமிழை வளர்த்து வந்தனர். குறிப்பாக சொல்ல வேண்டுமென்ருல் அந்நாடு அறிவு நிரம்பினவர்கள் சூழ்ந்த இடம். கல்வி செறிந்த கலைக்கழகம், இயலிசை தெரிந்து அதன் வழி நின்ற இணையிலா நாடு. அங்கு,

ஏடுகை யில்லா ரில்லை யியலிசை கல்லா ரில்லைப்
பாடுகை யில்லா ரில்லைப் பள்ளியோ செல்லா
ரில்லை
ஆடுகை யில்லா ரில்லை யதன்பயன் கொள்ளா
ரில்லை
நாடுகை யில்லா ரில்லை நற்றமிழ் வளர்ச்சி
யம்மா.
நாடெலாம் புலவர் கூட்டம் நகரெலாம் பள்ளி
யீட்டம்
வீடெலாந் தமிழ்த்தாய் கோட்டம் விழவெலாம்
தமிழ்க்கொண் டாட்டம்
பாடெலாந் தமிழின் றேட்டம் பணையெலாந்
தமிழ்க்கூத் தாட்டம்
மாடெலாந் தமிழ்ச்சொல் லாட்டம் வண்டமி
ழகத்து

அறிவு தெரிந்த அத்தனை மக்களும் போற்றும் அளவில் உலகத்து ஒளிதரும் பரிதிபோல மாண்புடன் விளங்கிய தென்பாலி நாடும் பெருவள நாடும் கடற்கோளால் கொள்ளப்பட்டு ஆங்கு அணியெனக் காட்சி தந்த மணிமலையும் குமரிமலையும் அணிமிகு பஃறுளி ஆறும் குமரியாறும் பெருநீரால் மறைக்கப்பட்டன.

எத்தனையோ வகப்பொருள்நூ லெத்தனையோ
புறப்பொருணூல்

எத்தனையோ விசைத்தமிழ் நூல்லெத்தனையோ

எத்தனையோ விலக்கியநூ லெத்தனையே

விவுலக்கணநூல் அத்தனையும் அழிந்தொழிந்தன.

சரித்திரம் செப்புகின்ற வழி நின்று பார்க்கும் போது தமிழகம் பழமையில் வெவ்வேறு வகையில் காட்சி தந்தது. ஒரு சமயம் பெரு நிலமாகிய பழந் தமிழகம் அஃதாவது பெருவள நாடும் தென்பாலி நாடும் ஆப்பிரிக்கா, ஆஸ்டிரேலியா வரை பரவி நின்ற மை கண்டோம். பின்னே, காலதேச வர்த்தமானத் தால் கடல்கோள் இன்னபிறவற்றால் அந்நிலம் அழிந்து அங்கு வாழ்ந்த மக்கள் பிறநாடுகளில் குடியேறி வாழ்க்கைத் தொடங்கிய சான்றுகளுக்கொப்ப ஆப்பிரிக் காவுக் கப்பாற்பட்ட நாடுகளிலிருந்து கிடைக்கும் புதை பொருளால் அறிகின்றோம். அந்தக் காலத்து முரிகூடல் மலைமீதிருந்த இலங்கை நாட்டில் மக்கள் தங்கி வாழ் க்கை நடாத்தினர். இலங்கை மலையின் மீதுள்ளது என்ற செய்தியைக் கம்பன் காட்டும் காட்சிப் படலத்தில் இலங்கன் மேலிலங்கை" என்பதனாலும் அறியலாம் அந்த இலங்கை மாநகர் பெறவேண்டிய வளமை பெற்று பெருமையோடு பொலிந்தது. நிறைமொழி மாந்தர் தொகை பெருகி கல்வியில் சிறந்தது. முத்தமிழ் வளர்க்தம் மேலோர் வழிவந்த நறுந்தேன் நிகர் இன் சொல் பேசும் மங்கையர்களைப் பெற்று கவினுற விளங் கியது. அத்தகைய மணித்திரு நாட்டை ஆரியர் நாகரிகத்துக்கு அழகு செய்த வான்மிகி இராமாயணத் தின் அடிச்சுவட்டைப் பின்பற்றின கம்பர் இலங்கை யிலுள்ளவர்கள் அரக்கர் அரக்கியரெனவும் மேலும் அவர்கள் ஆலமே உருவு கொண்டனைய மேனியர் என் றெல்லாம் நாட்டு மக்களுக்கு பழரசத்தோடு விஷத்தைக்

கொடுப்பது போன்ற செய்யுட்கள் பலவற்றைக் காண லாம்.

பொன்னை நிகர்த்த மேனி மின்னையே நிகர்த்த சாயல் கடலிடைப் பிறவா அமுது போன்ற அழகுடன் பொலிந்து காணப்பட்ட பெண்களை 'வன்ம ருங்குல் வாள் அரக்கியர்' என்றும், மேலும்

வயிற்றிடை வாயினர் வளைந்த நெற்றியிற்
குயிற்றிய விழியினர் கொடிய நோக்கினர்
எயிற்றினுக் கிடையிடை யானை யாளிபேய்
துயிற்கொள்வெம் பிலனெத் தொட்ட வாயினர்

இத்தகைய இழிவான நிலையில் கம்பரால் புனையப் பட்ட இராம கதையைப் படிக்கும் போது எந்தத் தன்மானத் தமிழனுக்குத் தம் மூதாதையர்களை அரக்க ரென்று சொல்லுமளவுக்கு வாளா இருப்பர். அந்த அள வுக்குக் கம்பராமாயணத்தில் பற்பல இடங்களில் தமிழ் மலர்ந்து பொலிந்த திருநாட்டைக் குறித்து நையாண் டிச் செய்யப்பட்டுள்ளது. ஆனல் இலங்கை அப்படி யன்று. உண்மையில் இலங்கை ஓர் சிறந்த செந்தமிழ் நாடு. செந்நெல்லும் கனியுங் காயுங் கடிமலர் கிழங்கும் பெற்று நஞ்சையும் புஞ்சையோடும் பொலிந்தது. மேல் வகை குடிகளை மேன்மையுற கண்ட நாடு. அது மாத் திரமல்ல, நிலவுமிழ் முடிகளாலும் நெடுந்தமிழ்க் கொடி களாலும் அலகில் பொன் மணிகளாலும் அமைந்த பல் வளங்களைக் கொண்ட பைந்தமிழ் நாடு. அங்கே

காரெலா மகிலி னூற்றங் காவெல்லாம் பூவி னூற்றம்
நீரெலாங் கலவை நாற்றம் நிலமெலாஞ் சேற்றி னூற்றம்
ஊரெலாந் தமிழி னூற்றம் உள்ளெலா முணவி னூற்றம்

என்னுமளவுக்குச் சிறந்த வாழ்க்கை நடாத்திய தண்டமிழர் கொள்வது மிகை கொள்ளாது கொடுப் பதுங் குறைவுபடாது என்றும் போற்றத்தக்க பெரு மைக்கு வியாபாரத் துறையில் உலகம் வியக்க பண்பட் டனர். இத்தகைய வளமையும் மற்றேனைய செல்வ அமைப்பும் வாய்க்கப் பெற்று தமிழ்ப் புலவர் சொன்ன படி நடைமுறையில் காட்டி மக்களொருமனப்பட்டு இலங்கை நாட்டு அதிபதி சிறக்க பொலிந்தார்.

தென் இலங்கை வேந்தன் முடிபுனைந்து சிம்மா சனத்தில் ஏறி குடிதழுவி கோலோச்சிய காலத்து நாட் டுக்கு இன்றியமையாதனவென்று சொல்லப்படும்.

மன்றமு மிளம்பூங் காவும் மறுகணை முடுக்
குஞ் சீர்செய்
குன்றமு நறுநீ ராடு குளமுமா டிடமுங்
கோணங்
துன்ருளி விளக்கு மாடந் தோய்நிலாமுற்ற
தம்மோ
டின்றெனு மிலம்பா டின்றி யிலங்கின
அரசிய லலுவல் காணு மகங்களோ டறந்தேர்
மன்றும்
வரிசையி னேடுபா ராளு மன்றமு மொன்றுங்
குன்றுட்
பரிசோடு கலைகள் தேரும் பல்கலைக் கழகம்
இன்னும் பலவற்றை அணியுறச் செய்து
மணிநீரு மண்ணு மலையு மணிநிழற்
காடு முடைய தரண்

என்று பொருட்பால் வகுத்துக்காட்டிய அளவுக்கு அரண்பல கண்டு நிலைபெற்ற நாடாக்கினன். அங்கே வசியும் வளனும் நிரம்பி மக்களுள் பேதா பேதமற்று சரிநிகர் சமானமாக எல்லோரும் இனிதுடன் விளங்கி னர்.

படித்துவிட்டீர்களா?

முன்னேற்ற எழுத்தாளர்

திண்டுக்கல் மா. தங்கவேலர் தீட்டியது.

1. காரல் மார்க்ஸ்
2. லெனின்
3. மாலடோவ்
4. வியட்நாமின் விடிவெள்ளி, ஹோசிமின்
5. நியூடன்

இவர்களின் தன்னலமற்ற தியாகத்தை

தித்திக்கும் நடையிலே

சிந்தனையைத் தட்டியெழுப்பும் தன்மையிலே

அழகுபட

லெனின் முகப்புப் படத்துடன்

இரு வர்ண கண்கவர் முகப்புடன் கொண்டது.

விலை அணா 8.

விவரங்கட்கு :—

ஆராய்ச்சி நிலையம், சென்னை-5.

மாதம் ஒரு நாவல் வெளிவருகிறது

1952 ஜனவரி 15-ல் வெளிவருகிறது

எமது முதல் வெளியீடு

1. இளம் எழுத்தாளர் தமிழ்வண்ணன் அவர்களின் மனதைக்கவரும் கற்பனை நூல் அதரபாணம்.

தொடர்ந்துவரும் நூல்கள்

2. இளம் எழுத்தாளர் ந. கோவிந்தராஜன் அவர்களின் கற்பனை ஓவியம் விதவையின் வாழ்வு.

3. இளம் எழுத்தாளர் மாணவி கஸ்தூரிபாய் அவர்களின் உதிர்ந்த ரோஜா.

4. இளம் எழுத்தாளர் ந. கோவிந்தராஜன் இயற்றிய நாடகம் கொலைகாரன்.

5. மற்றும் பல அறிஞர்களின் நாவலை தொகுத்து வெளியிடுகிறோம்.

6. புத்தகப் பட்டியலுக்கு எழுதவும்.

எங்கும் விற்பனை செய்ய விற்பனையாளர்கள் தேவை.

விபரங்களுக்கு :—

பொது அறிவுப்பண்ணை,

சென்னை-5.

WRAPPER PRINTED AT SAMPATH PRESS MADRAS.